செ. கு. எண்: 202 நாள் : 30.07.2013

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 30.7.2013

---

சவுதி அரேபிய நாட்டில் உள்ள தனியார் நிறுவனத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்களாக பணிபுரிந்து வந்த ராமநாதபுரம், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த 16 தமிழக மீனவர்கள் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது வழி தெரியாமல் ஈரான் நாட்டு கடல் பகுதிக்குள் சென்றுவிட்டதன் காரணமாக, ஈரான் நாட்டு அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளது குறித்து எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட உடன், அவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு நான் பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதினேன்.

அந்தக் கடிதத்தில், எந்தவித சட்ட உதவியையும் அளிக்காமல் ஈரான் நாட்டு நீதிமன்றம் அவர்களை விசாரித்து, ஒவ்வொருவரும் 5,750 அமெரிக்க டாலரை அபராதமாக கட்ட வேண்டும் என்றும், 6 மாத சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்துள்ளது என்றும், இந்த இரண்டில் ஆறு மாத சிறைத் தண்டனையை அவர்கள் அனுபவித்துவிட்டார்கள் என்றும், வறுமையின் காரணமாக அபராதத் தொகையை கட்டாததால் அவர்களை ஈரான் நாட்டு அரசாங்கம் சிறையிலிருந்து விடுவிக்கவில்லை என்றும், ஈரான் நாட்டில் உள்ள இந்தியத் தூதரகத்தை அவர்களால் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும், தமிழக மீனவர்களுக்கு சட்ட உதவி அளிக்கவோ அல்லது அவர்கள் பணிபுரிந்த தனியார் நிறுவனத்திற்கு அழுத்தம் கொடுத்து அவர்களை மீட்கவோ இந்தியத் தூதரகம் முயற்சி செய்யவில்லை என்றும் சுட்டிக்காட்டி, சவுதி அரேபியாவில் உள்ள இந்தியத் தூதரகம் மூலம் அபராதம் செலுத்த நடவடிக்கை எடுத்து, அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு பாரதப் பிரதமரை நான் கேட்டுக் கொண்டுள்ளேன்.

இந்தச் சூழ்நிலையில், ஈரான் நாட்டுச் சிறையில் உள்ள 16 தமிழக மீனவக் குடும்பங்களின் வறுமை நிலையினை கருத்தில் கொண்டு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**